Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 175


National Tamil Daily தேசிய தினசரி

(6-8-65)

விசுவாவசு ஆடி 22 ரபி: ஆகிர் பிறை 8 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன்



சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### ஹீத் மந்திரி சபை

லண்டன், ஆக. 5

பிரிட்டனில் தமது கட்சி பதவிக்கு வந்தால், மந்திரிசபையில் நியமிக்கவேண்டியவர்களின் பெயர்கள்பற்றி கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் திரு. ஹீத் அறிவித்திருக்கிறார். திரு. மால்டிங் கட்சியின் உப தலைவராகவும், சர்ச்சிலின் மருமகன் திரு. கிறிஸ்டோபர் தோமஸ் வெளிவிவகார பேச்சாளராகவும் இடம் பெறுவர்.

# மந்திரிசபையில் விரைவில் மாறுதல்

## மற்றுமொரு தமிழருக்கு மந்திரிபதவி

கொள்ளுப்பிட்டி, வியாழன்

மந்திரிசபையில் மற்றொரு தமிழர் விரைவில் இடம்பெறவிருக்கிறாரென்று நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கே மந்திரி பதவி கிடைக்குமென்று அறியப்படுகிறது.

இதற்கிடையில் ஒக்டோபர் மாதத்தில் காலியாகும் செனட்டர் பதவிகளுக்கு தங்களைத் தெரிவுசெய்யுமாறு தமிழரசுக் கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸினரும் தங்கள் கட்சியின் மேலிடங்களை வற்புறுத்தத் தொடங்கியுள்ளனர்.

## யாழ். மாவட்ட கிராமசபை மகாநாடு: மந்திரி விஜயம்

குரும்பசிட்டி, வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட கிராமசபைத் தலைவர்கள் மகாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் வருகிற சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். அன்றைய தினம் காலை யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் இம் மகாநாடு நடைபெறும். சுமார் 42 கிராமசபைத் தலைவர்கள் பங்குபற்றும் இம்மகாநாட்டில் கிராமச்சபைகளின் பல்வேறு பிரச்னைகள், தேவைகள் குறித்து விவாதிக்கப்படும்.

இதனையடுத்து கிராமசபைத் தலைவர்கள் சமாஜத்தினர் புளூபரின் ஹோட்டலில் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு நண்பகல் விருந்தொன்றை அளிப்பர்.

இம்மகாநாட்டிலும், விருந்துபசாரத்திலும் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டி. ராஜேந்திரா, மின்சார அதிபர், கிராமாபிவிருத்தி யோகப் பகுதி அதிபர், மற்றும் உள்ளூராட்சிப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் கலந்து கொள்வர்.

## 4 மந்திரிகள் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்

### நாளை 2 மந்திரிகள் வருவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம், தொழில் வேலைவாய்ப்பு வீடமைப்பு மந்திரி ஜனாப் எம் எச் முகம்மது ஆகியோரின் யாழ்ப்பாண விஜயத்தை அடுத்து மேலும் இரு அமைச்சர்கள் இங்கு விஜயம் செய்யவிருக்கிறார்களென தெரியவருகிறது. வரவு செலவுத்திட்ட விவாதம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்பட்டு முடிந்ததும், இம்மாத இறுதியில் சமூகசேவை மந்திரி திரு அசோகா கருணாரத்ன, ராஜாங்க மந்திரி திரு ஜே ஆர் ஜயவர்த்தன ஆகிய இருவருமே இங்கு வரவிருக்கும் மந்திரிகளாவர்.

இலங்கைத் தமிழர் பௌத்த கலாச்சார சங்க அழைப்பின் பேரில் சமூகசேவைகள் அமைச்சரும் யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ அழைப்பை ஏற்று ராஜாங்க அமைச்சரும் விஜயம் செய்வார்களென அறியவருகிறது.

## திருக்கேதீஸ்வரத்தில் பிள்ளையார் கோவில்

### ஸ்தாபிப்பதற்கு யாழ். இ. போ. ச. இந்து ஊழியர் சங்கம் முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இ போ ச இந்து ஊழியர் சங்கம் திருக்கேதீஸ்வரத்தில் ஒரு பிள்ளையார்கோவிலை ஸ்தாபிக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது: இ போ ச வடபிரதேச காரியாலய ஊழியர், யாழ்ப்பாணம் கிழக்கு, மேற்கு டிப்போவைச் சேர்ந்த ஊழியர், பருத்தித்துறை டிப்போ ஊழியர் ஆகியோர்கள் இத்திருப்பணிக்கு நிதிசேர்த்து வருகிறார்கள் இதுவரை சுமார் 2000 ரூபா வரை சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு மாதத்திற்குள் கோவிலை கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரியவருகிறது. இக்கோவில் திருக்கேதீஸ்வரம் பாலாவி ஆற்றுக்குப் பக்கத்திலும் பல நிலையத்துக்குப் பக்கத்திலுமுள்ள இடத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது.

**சுந்தரர் குருபூஜை**

மேற்படி இந்து ஊழியர் சங்கத்தின் ஆதரவில் சென்ற புதன்கிழமை வடபிரதேச காரியாலயத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வடபிரதேச உதவி முகாமையாளர் (வணக்கு) திரு நடராஜா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன.

இந்தூர், ஆக. 5

இந்தூரில் நிலைமை சகஜமாகி விட்டதால் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

## தொழில் மந்திரியும் வருகிறார்

குரும்பசிட்டி, வியாழன்

தொழில், வேலைவாய்ப்பு, வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். எச். முஹம்மது யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அழைப்பின் பேரில் இரண்டாவது தடவையாக வருகிற சனிக்கிழமை இங்கு வரவிருக்கிறார். மந்திரி முஹம்மது சனிக்கிழமையன்று யாழ்ப்பாணத்திலுள்ள இரு இடங்களில் வீடமைப்புத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவார். முஸ்லிம் வட்டாரத்திலும், குருநகரிலும் இவ்வைபவங்கள் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமையன்று மந்திரி தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திப்பதுடன் தேசிய வீடமைப்பு இலாகாகிளையொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கான ஒரு கட்டடத்தையும் பார்வையிட்டுத் தெரிவுசெய்து கொள்வார்.

## டானாங் சப்ளை தளம் கொரில்லாக்கள் அழித்தனர்

சைகோன், ஆக. 5

டானாங்விமானத்தளத்துக்கும் பயன்படும் இடம் ஒன்றை வியட்காங்கியர் தாக்கி கிடங்குகளை மோட்டார் பீரங்கிகளினால் தாக்கி அழித்ததாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் டானாங்குக்கு சப்ளை செய்யப்படும் எரிபொருள்களில் 40 சதவிகிதம் எரிபொருள்கள் எரிந்து போயிற்று என்றும் இந்த இடம் டானாங் [illegible] இருந்து [illegible] [illegible].

## சகோதரிகளின் வாய்ப்பேச்சு தற்கொலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், வியாழன்

தமது தங்கைகள் நால்வரையும் பாடசாலையில் படிக்க வைத்துவிட்டு பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த தன்னை மட்டும் வீட்டு வேலைகளைச் செய்விப்பதற்காக வீட்டில் நிறுத்தி வைத்ததனால் ஏற்பட்ட மனமுடைவினால் 19 வயதான மகேஸ்வரி என்ற யுவதி தற்கொலை செய்து கொண்ட பரிதாபகரமான சம்பவம் நேற்றுக்காலை சிறுப்பிட்டியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நகர மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் நடத்திய மரண விசாரணை ஒன்றின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

மகேஸ்வரியின் தந்தையார் சின்னத்தம்பி கம்பிப்பிள்ளை மரண விசாரணையின் போது சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனக்கு எல்லாமாக ஐந்து பெண் பிள்ளைகள். இவர்களில் மூத்தவர்தான் காலஞ்சென்ற மகேஸ்வரி. வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு ஆளில்லாத படியால் இவரைப் பாடசாலையிலிருந்து சென்ற வருடம் நிறுத்திவைத்தேன். இதன்பிறகு பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த நான்கு பிள்ளைகளுக்கும் இவருக்குமிடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டது. நேற்றுக் காலை 10 மணிக்கு நான் தோட்டத்துக்குப் போய் விட்டு இரவு 7 மணிக்கு வீட்டுக்கு வந்தபோது மகேஸ்வரி நஞ்சு குடித்து விட்டதாகவும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு விட்டதாகவும் அறிந்தேன்"

காலஞ்சென்றவரின் தாயார் தங்கச்சி அம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நேற்றுக்காலை 7 மணிபோல் எனது மூத்தமகள் மகேஸ்வரிக்கும் 2-வது மகளுக்கும் இடையில் சண்டை நடந்தது மகேஸ்வரி தனது தங்கையை வந்து உதவி செய்து தரும்படி கேட்டபோது அதற்கு அவள் தனக்கு சோதனை நடப்பதாகக் கூறி மறுத்துவிட்டதுதான் இச் சண்டை ஏற்படக்காரணம். பின்னர் காலை 8 மணிபோல் நான் தோட்டத்திற்குப் போய் விட்டேன். காலை 9 மணி போல் எனக்கு மகேஸ்வரி சாப்பாடும் தேநீரும் கொண்டு வந்தாள். மாலை 8 மணிமட்டும் என்னுடன் நின்றுவிட்டு ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குப்போய்விட்டாள். மகேஸ்வரி ஒன்றும் சொல்லாமல் போய் விட்டதனால், நானும் வீட்டுக்கு உடன் போனேன். வீட்டில் மகேஸ்வரி வாந்தி எடுத்துக் கொண்டிருப்பதையும், அவள் பக்கத்தே ஒரு போத்தல் இருப்பதையும் கண்டேன்! அவள் கிருமிநாசினி அருந்தியதைத் தெரிந்துகொண்டு, அவளை உடனே ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசென்றேன்!

காலஞ்சென்றவரின் தங்கை மங்கையர்க்கரசி (18 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'நான் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் எஸ் எஸ் ஸி படித்துக்கொண்டிருக்கிறேன். நேற்றுக் காலை என்னைத் தன்னுடன் குசினிக்குள் வந்து வேலைசெய்யுமாறு அக்கா மகேஸ்வரி கேட்டார். நான் எனக்குச் சோதனை என்று கூறி மறுத்துவிட்டேன். இதனால் எனக்கும் அவருக்குமிடையில் சண்டை ஏற்பட்டது பின்னர் அம்மா வந்து எங்களுக்கிடையே சமாதானம் செய்துவைத்தார்: நான் காலை சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது, அக்கா என்னைப் பார்த்துச் சிரித்துப் பகிடியாக, "இன்று மத்தியானம் எனது கடைசிச் சாப்பாட்டைச்சாப்பிடு' என்று கூறினர்.

பதில் சட்டவைத்திய அதிகாரி திரு எஸ் சுப்பிரமணியம் நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட மரணம்எனத் தீர்ப்பளித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு

ஓ-மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீயாரெனத் தெரிந்து கொள்ளுவாய். துயருறத்தகாதகாரியங்களில் துயருறுதே. துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

—யோகசுவாமிகள்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி ௴ 22 உ. (6-8-65)

## திருடர் தொல்லை

கரணவாய்ப் பகுதியில் திருடர் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. ஒரே இரவில் பல இடங்களில் திருட்டு நடைபெற்றிருக்கிறது. திருடர்கள் நவீன தந்திரங்களையும் கையாண்டிருக்கிறார்கள். இந்த விபரம் நேற்று முன்தினம் 'ஈழநாடு' பத்திரிகையில் கரவெட்டி நிருபர் அனுப்பிய செய்தியில் வெளியாகியிருந்தது. கரணவாயில் மட்டுமல்ல பொதுவாக யாழ்ப்பாணப் பகுதியிலேயே இப்பொழுது திருடர் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதை விரைவில் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

கரணவாய்ப் பகுதியில்நடைபெற்றுள்ள திருட்டுச் சம்பவங்களைக் கவனிக்கையில் அவை சாதாரண திருட்டுகளாகத் தோன்றவில்லை. திருடர் கோஷ்டி இயங்குவதாகவும் அது தீவிரமாகச் செயல்படுவதாகவும் கருத இடமுண்டு. கிராமவாசிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தொண்டர் படைகள் அமைத்துள்ளனர். தொண்டர்படைகள் அமைப்பதுடன் நில்லாது திருட்டுக்களைத் தடுப்பதற்கு பொலிஸாருக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டியதும் பொதுமக்களினது கடமையாகும். இதேசமயம் பொதுமக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பொலிஸாரும் நாடவேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் நாட்டில் குற்றச் செயல்களைத் தடுத்துவிட முடியாது. இப்பொழுது திருட்டு மற்றும் குற்றச் செயல்களைக் கண்டுபிடிப்பதற்கு நவீன வசதிகள் பல உள. இந்த வசதிகளைப் பயன்படுத்தி தீவிரமாகத் துப்பறிந்து விசேஷ கவனம் செலுத்தி திருடர் கோஷ்டியைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது பொலிசாரின் பொறுப்பும் கடமையுமாகும். சிறு சிறு சம்பவங்கள்தான் என இவ்விஷயத்தில் அசட்டையாக இருந்தால் திருடர் தொல்லை இதர கிராமங்களுக்கும் பரவிவிடும். உடனடியாக உஷாராக நடவடிக்கை எடுக்காமல் திருடர் தொல்லையைப் பரவவிடுவது கோழைத்தனமாகும்.

1937ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும் அயல் கிராமங்களிலும் திருடர் கோஷ்டியொன்று நடமாடியது. அதைப்பற்றிப் பொலிஸார் அசிரத்தையாக இருந்ததால் இறுதியில் இளவாலையில் ஒரு களவு இரட்டைக் கொலையில் முடிந்தது. திருட்டில் சுவை கண்டவர்கள் கொலைக்கும் அஞ்சமாட்டார்கள். களவும் கொலையும் நாட்டில் அமைதியைச் சீர்குலைத்துவிடும். 'வாலை விட்டுத் தும்பைப் பிடித்தகதை'யாகிவிடாமல் திருடர் தொல்லையை முளையிலேயே கிள்ளுவதற்குப் பொலிஸார் உஷாராகக் கடமையாற்ற இன்றே தொடங்க வேண்டும். நமது பொலிஸாருக்குத் திறமையிருக்கிறது. அதைத் தகுந்த முறையில் அவசியமான விஷயத்தில் பயன்படுத்தவேண்டும். திருடர் தொல்லையை ஒழித்துக்கட்டி மக்களின் அச்சத்தை நீக்க வேண்டியது பொலிஸாரின் அவசரமும் அவசியமுமான கடமை.

## உதவி மந்திரியின் மறுப்பு

பம்பலப்பிட்டி, வியா.

எமது சமீபத்திய வெளிநாட்டுப் பயணத்தினால் எதுவித செலவும் ஏற்படவில்லையென ஸ்தலஸ்தாபன உதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா, பொதுக் கூட்டமொன்றில் திரு. பிரேமதாஸாவும்; அவரது மனைவியும் இலங்கை மக்களின் செலவில் வெளிநாடு சென்றதாக (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) கூறியிருந்ததாக வெளிவந்த செய்திக்கு மறுப்புத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

## மந்திரி விஜயம் செய்வார்

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறைத் தொகுதியில் மிகவும் பின் தங்கியகிராமமான செம்பியன்பற்றுக் கிராமத்தின் அபிவிருத்திபற்றியும் தேவைகள்பற்றியும் அறியும் பொருட்டு செம்பியன்பற்றுக்கு ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு திருச்செல்வம் விரைவில் உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் செய்துவருகிறார்.

விஜயம் செய்யும் அமைச்சரை சிறந்தமுறையில் வரவேற்க கிராமசபையும் பகுதி மக்களும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் முதன்முதலாக இப்பகுதிக்கு ஒரு அமைச்சர் விஜயம் செய்வது இப்போதுதான் என்பதால அதற்கான ஒழுங்குகள் பற்றி ஆலோசிக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

## அறநெறிக் கழகக் கூட்டம்

உடுப்பிட்டி, வியாழன்

"சைவ ஆலயங்களுக்கென்று தனியாக நந்தவனங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். ஆதியிலே அப்பரும் சுந்தரரும் சம்பந்தரும் மணிவாசகரும் நந்தவனச் சிறப்பைப் பற்றிப் பாடியுள்ளார்கள். சுந்தரமூர்த்தியாரும் தேவலோகத்தில் பூக்கொய்யும் தொழில் புரிந்தார் என்று புராணம் கூறுகிறது. மலர் தூய்மையானது. எனவேதான் அதனைப் பூஜைக்கு உபயோகிக்கிறார்கள்" என்று கெல்லை அறநெறிக்கழகக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. வெ. முருகேசு பேசுகையில் கூறினார்.

ஆசிரியர் திரு. இராசரத்தினம், திரு. கி. தெய்வேந்திரன் ஆகியோரும் பேசினர். சுந்தரர் பூசையைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பிரச்னை

## அரசாங்க அதிபரிடம் தூது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் சம்பந்தமாக வடபகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தூது கோஷ்டியொன்று சமீபத்தில் அரசாங்க அதிபரை சந்தித்து பஸ் நிலைய நிலைமைபற்றியும் பிரயாணிகள் கஷ்டங்கள் பற்றியும் எடுத்துக்கூறியது.

### சங்கத்தின் தீர்மானங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய பஸ்நிலையம்போதியளவு பஸ்கள் நிறுத்துவதற்கு வசதியற்றதாகவிருப்பதால் நல்ல வசதியுள்ள இடத்துக்கு பஸ் நிலையத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று வடபாக பஸ், புகையிரத பிரயாணிகள் சங்க ஆண்டு நிறைவு விழாவில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

கந்தர் மடத்தில் திரு. க. வடிவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கம் செய்யவேண்டிய சேவைத் திட்டங்களைப்பற்றியும், கிராமப் புறங்களிலுள்ளவர்களின் பிரயாணக் கஷ்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரயாணிகள் சங்க அங்கத்தவர்கள் பிரயாணிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களையும், பிரயாணிகளுக்கு வசதியாகச் செய்யவேண்டிய போக்குவரத்து திட்டங்கள் குறித்தும் பேசினார்கள். இதனையடுத்து புகைவருட உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம் பெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

வடபிரதேசத்திற்கு போதியளவு பஸ்வண்டிகளை அனுப்பிப் பிரயாணிகளின் போக்குவரவுக் கஷ்டங்களை ஓரளவு குறைத்துள்ள போக்குவரத்து மந்திரிக்கும், விசேடமாக வட்பிரதேச முகாமையாளருக்கும் பிரயாணிகள் சங்கம் தனது நன்றிபறவித்தலைச் சமர்ப்பிக்கின்றது

பருத்தித்துறை டிப்போ, யாழ். கிழக்கு டிப்போ, யாழ். மேற்கு டிப்போ ஆகிய மூன்று நிலையங்களிலும் எமது சங்கம் பதிவு செய்யப்பட்டிருப்பதாலும், அங்கத்தவர்கள் பலர் சேர்ந்திருப்பதாலும், புதிதாகப் பஸ்வண்டிகளை அனுப்பும் போது எமது சங்கத்துடனும் தொடர்புகொள்வதால் பிரயாண நெருக்கடியான பகுதிகளுக்கு பஸ்வண்டிகளை சமப்படுத்தும்விஷயத்தில் புத்திமதி கூறலாம்.

பெண்களுக்குப் பிரத்தியேக இடம். நமது நாட்டுக் கலாசாரத்திற்கமையப் பெண்களுக்குப் பிரத்தியேகமான இடம் பஸ்வண்டியில் சட்டமூலம் ஒதுக்கப்படுதல்.

பழைய பஸ்நிலையமும் அதனையடுத்த முனிசிப்பல் காணியும் எவ்வித பிரயோசனமும் அற்று கப்பாந்தரையாக இருப்பதால் ஸ்டான்லி வீதிக்கு பஸ்நிலையத்தைமாற்றி பிரயாணிகளுக்கு மேலும் கஷ்டத்தையும் சிரமத்தையும் கொடுக்காது அவ்விடத்திலேயே புதிய பஸ்நிலையத்தை அமைக்க வேண்டும்.

## தீர்மானத்துக்கு பின் அங்கத்தவர் வெளியேற்றம்

சாவகச்சேரி, வியாழன்

கிராமசபை அங்கத்தவர்களின் கூட்டமொன்று நடந்து கொண்டிருக்கும்போது அங்கத்தவர் ஒருவர் கூட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்ட சம்பவமொன்று அண்மையில் நடைபெற்ற சாவகச்சேரி கிராமசபைக் கூட்டத்தில் நடைபெற்றது.

மேற்படி கிராமசபையின் விசேஷ கூட்டமொன்று தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியத்தின் தலைமையில் கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு சி. சின்னத்துரை ஒரு கடிதத்தைத் தலைவரிடம் ஏற்றுக் கொள்ளுமாறு கொடுத்தார். தலைவர் ஏற்றுக்கொள்ள மறுத்ததனால் அந்த அங்கத்தவர் தனது கடிதத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினர். அதைத் தொடர்ந்து அந்த அங்கத்தவரைக் கூட்டத்தைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவசரத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் வெளியேற்றப்பட்டார்.

## சமயப்பிரசாரக் கூட்டம்

மீசாலை, வியாழன்

"மலைபோல் கஷ்டங்கள் வரினும் இறைபத்தியுடன் கடவுளை வழிபடுபவர்களுக்கு அக்கஷ்டங்கள் குறைவடையும்" என்று தென்மராட்சி சைவ மகா சபைச் செயலாளர் திரு இ. த. சுப்பிரமணியம் கொககுவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சைவ சமய பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

... தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## "வரியிறுப்பாளர் சங்கம் என்று ஒன்று இல்லை"

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை நகரசபை சம்பந்தமாக வரியிறுப்பாளர் சங்கம் என்ற பெயரில் ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கு மகஜரொன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமான ஒரு செய்தியைத் தொடர்ந்து அப்படியொரு சங்கம் இங்கு இல்லையெனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை உண்மையல்லவெனவும் ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கு ஒரு மகஜரை பல வரியிறுப்பாளர்களும் கைச்சாத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் நகரசபை மேற்கொண்டுள்ள நல்ல அபிவிருத்தித்திட்டங்கள்பற்றியும் அதன் தற்போதைய சேவைபற்றியும் விளக்கிக் காட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## இலங்கை-மே.ஜேர்மன் கலாசாரகிளை

குரும்பசிட்டி, புதன்

இலங்கை—மேற்கு ஜெர்மன் கலாசார, நட்புறவுச்சங்ககிளை பருத்தித்துறைப் பகுதியில் இம்மாத நடுப்பகுதியில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கிளைச்சங்கத்தினை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம்செய்து ஆரம்பித்து வைப்பதற்கு மேற்கு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கை ஸ்தானிகர். திரு. ஸ்க்வோர்பெல் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கின்றார்.

## நாட்டிலும் நகரிலும்

பூமியில் உற்பத்தியாகும் பொருட்கள் யாவும் இறைவனடியில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்தத் தத்துவத்தைக் கடந்த ஞாயிறன்று நேரில் பார்க்க முடிந்தது. அன்று ஆவரங்கால் சிவன் கோவிலில் பூங்காவனத் திருவிழா நடத்தினார்கள். வழமைபோல் அங்கே கோயில் வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த சிகரங்களும், சப்பரங்களும், மின்சாரவிளக்கு ஜோடனைகளும் கண்கொள்ளாத கோலாகலமாயிருந்தது. அவற்றில் அமைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான சித்திரங்களும், தெய்வங்களின் உருவங்களும், மயில், மகரம், அன்னம், கருடன் முதலியனவும் யாழ்ப்பாணத்தவரின் கலைத்திறனை வெளிப்படுத்தின. ஆனால் எந்த ஒரு அழகான பொருளுக்கும் திருஷ்டி பரிகாரத்துக்கு ஒரு மறு இருப்பதுபோல, ஒரு சிகரத்தில் முருகப்பெருமானுக்கும் வள்ளி நாயகிக்கும் மத்தியில் எம். ஜி. ஆர் தலைவிரி கோலமாய் நிற்பதையும்கண்டேன்.

இவைஎல்லாவற்றையும்பார்க்க எல்லோருடைய மனத்தையுங் கவர்ந்தது சுவாமியும் அம்மனும் வீற்றிருந்த பூங்காவனம்தான். அங்கே நெற்கதிர்முகம் கொண்டு வெங்காயக் குலைகளும், புடலங்காய், பயிற்றங்காய் முதலிய சகலவிதமான காய்கறிகளும், பச்சைப்பாக்குக் குலைகளும், துங்குக் குலைகளும், இளநீர்க் குலைகளும், தாளங்காய்களும், இன்னும் இயற்கை தரும் நூற்றுக்கணக்கான விளைபொருள்களும் கடவுள் திருவுருவங்களை அலங்கரித்தன. கிளி, மயில்போன்ற உயிருள்ள பிராணிகளும் அந்த வனத்தில் இருந்தன.

இக்காலத்தில் நெற்கதிர்கள் எங்கே அகப்பட்டது என்று ஒருவரை விசாரித்தபோது அவர் விளங்கப்படுத்தினர். இத்திருவிழா ஊர்ச்சனம் ஒன்றுகூடி செய்வதாம், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு காணிக்கை கிடைக்கும். பிற ஊர்களிலிருப்பவர்கள் அவ்வூர்களிலுள்ள நூதனமான பொருட்களைக் கொண்டுவருவார்களாம். இப்படியே நெற்கதிர் கிளிநொச்சியிலிருந்தும், தம்புட்டான் குலைகள் கனகம்புளியிருந்தும் வந்தனவாம். ஊரிலுள்ள பத்துவயதுக்குட்பட்ட சிறுவர்களே பூங்காவனத்தில்தொங்க விடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான தாளங்காய்களை கடற்கரைக்குச்சென்று பறித்து சமந்து வந்தார்களாம்.

இக்கோயிலில் 'சின்னமேளம்' சிலவருடங்களுக்குப்பின் நிறுத்திவிட்டார்கள் என்றசெதியும் காதில் விழுந்தது.

இன்னுமொருநல்ல சேதி. அங்கே அன்னதானமும் நடந்தது. சென்ற வருடம் மாரி மழை இல்லாமல் வேளாண்மை அழிந்தபோதிலும் கோயில்களில் அன்னதானம் நடப்பது இறைவனுடைய மகிமைதான். நல்லூரிலும், கதிர்காமத்திலும் செல்வச்சந்நிதியிலும், கொழும்பிலும் முருகன் பவனி வரப் போகும் இந்நாட்களில் அந்த இடங்களில், அன்னதானம் செய்வதைப்போல், சிறந்ததெய்வத்தொண்டு வேறொன்றுமில்லை.

"வழிப்போக்கன்"

சாவகச்சேரி, வியாழன்

சங்கத்தானை புகையிரதநிலையத்தில் இரவில் சிறு வெளிச்சம்கூட இல்லாமையினால் பெண் பிரயாணிகள் இராப்புகையிரதத்தை எதிர்பார்த்து இங்கு தங்கமுடியாதிருக்கின்றது.

இந்த நிலை பலமாதங்களாக நீடித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாதது வருத்தத்திற்குரியது என்று பல பிரயாணிகள் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரீஸில் நோவாஸ் அரசாங்கம் வீழ்ச்சி

## மன்னர்-பபாந்திரியோஸ் பலப்பரீட்சையில் முன்னுள் பிரதமருக்கு வெற்றி

### மீண்டும் பிரதமராக சபைக்கு வருவேன் என்கிறார் பபாந்திரியோஸ்

ஏதென்ஸ், ஆக. 5

கிரீஸில் 3 வார காலம் பதவி வகித்த திரு. நோவாஸின் அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பு தோல்வியுற்றதை அடுத்து, தாம் ராஜினாமாச் செய்யப்போவதாய் பிரதம மந்திரி அறிவித்தார்.

நம்பிக்கைப் பிரேரணைக்குச் சாதகமாக 131 வாக்குகளும், எதிராக 167 வாக்குகளும் கிடைத்தன.

முன்னூரன் அமளிதுமளிக்கு மத்தியில் நடைபெற்ற விவாதத்திற்குப்பின் இன்று வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்புக்குப் பின்பு திரு. நோவஸ், புதிய அரசாங்கம் பதவி ஏற்கும்வரை பார்லிமெண்டின் அரசாங்கக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு உதவி சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

முன்னுள் பிரதமர் திரு பபாந்திரியோஸுக்கும், மன்னருக்குமிடையேயான பலப்பரீட்சை இன்று வாக்கெடுப்பை யடுத்து ஒரு முடிவுக்குவந்தது. அதன் பின் திரு. பபாந்திரியோஸ் வெளியிட்ட அறிக்கையில் தாம் அடுத்து பார்லிமெண்டுக்கு வரும்போது பிரதம மந்திரியாகவே வரப்போவதாகக் கூறினர்.

வாக்கெடுப்பின் போது திரு பபாந்திரியோஸ் பார்லிமெண்டில் நுழைந்தசமயம் அங்கத்தினர்கள் கரகோஷம் செய்தார்கள். அதற்கு முன் விவாதத்தின்போது சபை அங்கத்தினர்களிடையே கைகலப்பும் ஏற்பட்டது. அதே சமயம் வெளியில் கூடியிருந்த 2000 ஆர்ப்பாட்டக்காரர்கள் பபாந்திரியோஸை ஆதரித்துக் கோஷம் எழுப்பியவண்ணம் இருந்தனர்.

## ஒரே சமயத்தில் 18 பறக்கும் தட்டுகள் வந்தன!

கியூரிடியா (பிரேஸில்), ஆக. 5

வட பிரேஸிலின் பரலு ர ஜ்பக்தில் 18 பறக்கும் தட்டுக்களைக் கொண்ட அணிவகுப்பொன்றை பட்டப்பகலில் ஐந்து பேர் கண்ணுற்றுள்ளனர்.

பறக்கும் தட்டுப்பற்றிக் கடைசியாகக் கிடைத்த இத்தகவல் இது. 4 பறக்கும் தட்டுக்கள் ஒன்று வருவதை இரு சிறுமிகள் கண்டு தங்கள் தாயையும், அயலவர்களையும் அழைத்துக் காட்டினர். எல்லோரும் பார்த்திருக்க, முன்வந்த பறக்கும் தட்டுகளைத் தொடர்ந்து மேலும் 14 பறக்கும் தட்டுகள் அணிவகுத்து வந்தன. பச்சைநிற விளக்குகளைக் கொண்ட அவை வெள்ளி நிறத்துடன் காட்சியளித்தன.

அதேசமயம் சிலி தலைநகர் சந்தியாகோவிலிருந்து மற்றோர் தகவல் வந்திருக்கிறது. பறக்கும் தட்டு ஒன்று பூமியில் இறங்கியதாயும், ஆட்கள் நெருங்குவதைக் கண்டவுடன் அது புறப்பட்டுவிட்டதென்றும் இத்தகவல் கூறுகிறது.

## கொலையாளி தப்பினன்

புதுடில்லி, ஆக. 5

பஞ்சாப் எல்லையில் பாரத ரோந்து பொலிஸ் மீது பாகிஸ்தானியர் சுட்டது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனை மறிக்க முயன்றபோது பாகிஸ்தானியர் பலமாகச் சுட்டனர் என்றும், இதன்விளைவாக கொலைக்காரன் தப்பிச் சென்றுவிட்டான் என்றும் கூறப்பட்டது.

## தந்தையைக் கொன்றார் தனயன்

மனிலா, ஆக 5

காட்டுவேட்டையாடச் சென்றிருந்த 15 வயதுச் சிறுவனொருவன் மங்கிய இருளில் சிறிய ஒளியைக் கண்டதும் மானுடைய கண்ணென நினைத்து தாம வைத்திருந்த துப்பாக்கியினால் சுட்டான். பாவம் அவன் சுட்டது தனது தந்தையை எனப் பின்னர்தான் அறிந்தான். மான் என நினைத்து அவன் குறிபார்த்து சுட்ட இடத்தில் அவனது தந்தை நின்றுகொண்டிருந்ததனால் இந்த பரிதாபசம்பவம் நிகழ்ந்தது.

## இலங்கை கூட்டுறவாளர் கருத்து

பெர்லின் ஆக. 5

ஜெர்மன் ஜனநாயகக் கூடியரசுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை இரத்தினபுரி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு ஹெரி வீரசேகரா கூட்டுறவுத்துறையில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அடைந்துள்ள அபிவிருத்தியைப் பெரிதும் பாராட்டினர். இருநாடுகளின் கூட்டுறவுச் சங்கங்களிடையே ஏற்பட்டுள்ள தொடர்பு பலனளித்துள்ளது என்று அவர் கூறினர். பெர்லினிலிருந்து வெளியாகும் "தகவல்" என்ற கூட்டுறவாளர் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியின்போது தான் இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

இங்கு பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களாலும், விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களாலும் நடாத்தப்படும் பண்டகசாலைகள், தொழிற்சாலைகள் முதலியனவற்றையும் திரு வீரசேகரா பார்வையிடுவார். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 740 பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் 8900,000 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

## கூட்டறிக்கை

அடிஸ் அபபா ஆக 5

எதியோப்பிய மன்னர் ஹெய்லி செலாஸியும், நியூஸிலாந்து தலைவர் டாக்டர் பார்டாவும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் ரொடீஷியா சம்பந்தமாக அரசியலமைப்பு மகாநாடு ஒன்று கூட்டவேண்டும் எனக் கேட்டிருக்கிறார்கள்.

## ஏடனில் கைக்குண்டு

ஏடன், ஆக. 5

ஏடனில் கைக்குண்டு ஒன்று [illegible] காயமடைந்தனர்.

## கலகக்காரர் சரணுகதி இல்லை

கார்டூம் ஆக. 5

தென் சூடானில் சரணுகதி அடையும்படி கலகக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த கெடுபூர்த்தியடைந்தும் அப்படிச்செய்ய அவர்கள் தவறிவிட்டதால், அவர்களை எதிர்த்துப் போராட துருப்புக்கள் அனுப்பப்பட்டன.

## ஐப்பானுக்கு வடவியட்னும் எச்சரிக்கை

ஹானுய், ஆக 4

ஜப்பானிலுள்ள அமெரிக்க தளங்களிலிருந்து வடவியட்னும் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க விமானங்களை அனுமதிக்கக்கூடாதுஎன வடவியட்னும் ஜப்பானுக்கு தெரிவித்திருக்கிறது.

இதனுல் ஏற்படும் விளைவுகளுக்கு ஜப்பான்தான் முற்றும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அது எச்சரித்திருக்கிறது.

## மனித உரிமைக் குழுவின் முடிவுக்கு வரவேற்பு

ஜெனிவா, ஆக. 5

யுத்தக் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப்பது சம்பந்தமாக ஐக்கிய நாட்டு மனித உரிமைக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வரவேற்றுள்ளது. இத்தீர்மானத்தை ஆதரித்து ஐக்கிய நாட்டு பொருளாதார, சமூக சபையின் 39 வது மாநாட்டுக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிவிவகார அமைச்சு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையில் உலக சமாதானத்தையும், சர்வதேச பாதுகாப்பையும் முன்னிட்டு யுத்தக் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை அளிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியுள்ளது.

## இந்திய சமாதானசபை தலைவர் கருத்து

ஹெல்சிங்கி, ஆக. 5

அணு ஆயுதம் பெறும் முயற்சியைக் கைவிடும்படியும், பிறருக்கு உரிய பிரதேசத்தைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிடும்படியும் உலக சமாதான இயக்கம் மேற்கு ஜெர்மனியை நிர்ப்பந்திக்கவேண்டுமென இந்திய சமாதானச் சபையின் தலைவரும், பத்திரிகையாளருமான ஜால் பகதூர் சிங் ஹெல்சிங்கியில் கூறினர்.

உலக சமாதானக் காங்கிரசில் கலந்துகொள்வதற்காக அவர் இங்கு வந்திருந்தார். ஜெர்மனி - செக்கோஸ்லாவேகியா எல்லையையும் என்றும் மாற்றமுடியாதென்றும், பலவந்தமாக இந்த எல்லைகளை மாற்ற முயன்ருல் அணுகுண்டு யுத்தந்தான் ஏற்படுமென்றும் அவர் எச்சரித்தார்.

## சக்னாவுக்கு ஆதரவு

குவெட்டா, ஆக. 5

இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அலிகார் பல்கலைக்கழகம் சம்பந்தமான அவசரச் சட்டத்தை 16000 க்கு அதிகமான முஸ்லீம்கள் வரவேற்றனர். கல்வி மந்திரி திரு. சக்னாவுக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

## மாவுக்கு டிகால் கடிதம்

பீகிங், ஆக 5

பிரெஞ்சு அதிபர் டிகால் சீனத் தலைவர் மாவோதுங்குக்கு அனுப்பிய கடிதம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. சர்வதேச நிலைமை பற்றி அதில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## ஆப்கன் மன்னர்

மாஸ்கோ, ஆக. 5

ஆப்கானிஸ்தான் மன்னர், நேற்று சோவியத் தலைவர்களுடன் சர்வதேச நிலைமை பற்றி விவாதித்தார்.

## நாஸர்-டோரே

கெய்ரோ, ஆக. 5

ஜனுதிபதி நாஸரும், கினி ஜனுதிபதி டோரேயும் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாடு பற்றி நேற்று விவாதம் நடத்தினர்.

## சீனவை நம்பாதீர்

லண்டன், ஆக். 5

ஆபிரிக்காவில் சீனர்கள் சதிவேலைகளில் ஈடுபட்டுவருகிருர்களென்றும், தமது நாடு சீனவுடன் ராஜீயத் தொடர்பு கொள்வது தற்காலைக்கு ஒப்பானதென்றும் நைகர் ஜனுதிபதி கூறினர்.

## கார்ப்பரேஷனை கலைக்கும் அதிகாரம்

### சட்டசபைவிவாதம்

சென்னை, ஆக. 5

சென்னை முனிசிப்பல் கார்ப்பரேஷனைக் கலைக்கவோ, அதிகாரத்தை செல்லாபடியாக்கவோ செய்வது சம்பந்தமான விவாதம் இன்னும் சட்டசபையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கார்ப்பரேஷனின் சேவைக்கு வரம்புகட்ட வேண்டுமெனபதும் உத்தேசமசோதாவின் நோக்கம்.

இவ்விஷயமாக பொதுமக்களின் கருத்தை அறியவேண்டுமென்ற தி மு க கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கார்ப்பரேஷன் தி மு க வசம் இருப்பதால் தான இவ்வித யோசனை விவாதிக்கப்படுகிறது. என்ற குற்றச்சாட்டை முதன் மந்திரி நிராகரித்தார்.

## அமெரிக்க படைகள் 30 லட்சமாக அதிகரிக்கிறது

### தென் வியட்னுமுக்கு 170 கோடி டாலர் அவசரநிதி கோரிக்கை

வாஷிங்டன், ஆக. 5

தென்வியட்னுமுக்கு அவசரகால உதவியாக மேலும் விமானங்களும் இதர சர்வீஸ்களும் அளிப்பதற்கு 170 கோடி டாலர் அனுமதிக்கும்படி ஜனுதிபதி ஜோன்ஸன் அமெரிக்க காங்கிரசைக் கேட்டிருக்கிறார். அடுத்த ஜனவரி மாதம் தாம் இன்னும் பெரிய தொகையைக் கோரவிருப்பதாயும் ஜனுதிபதி அறிவித்திருக்கிறார்.

**மூன்றரை லட்சம் அதிகரிப்பு**

அமெரிக்கா தனது ராணுவப்படையில் 3,40,000 வீரர்களைச் சேர்ப்பதன் மூலம் மொத்த வீரர்களின் எண்ணிக்கையை 30 லட்சமாக உயர்த்தவிருப்பதாயும் திரு. ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.

**டெய்லர் சந்திப்பு**

தென்வியட்னுமில் முன்பு அமெரிக்கத் தூதராக இருந்த ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் நேற்று ஜனுதிபதியிடம் தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதன் பின் அவர் நிருபர்களிடம் பேசியபோது "நாம் சரியான பாதையில்தான் செல்கின்றோம்" என்று குறிப்பிட்டார். ஜனுதிபதியின் அழைப்பிற்கிணங்க உயர் ஆலோசகர்களும் அவரைச் சந்தித்தார்கள்.

**ஹரிமன் அறிக்கை**

8 வாரம் ஐரோப்பியத் தலைநகர்களில் சுற்றுப் பிரயாணம் செய்த திரு. ஹரிமன் விடுத்திருக்கும் அறிக்கையில், வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்த ரஷ்யா விரும்புவதாயும், ஆனுல் அமெரிக்கா பலப்பரீட்சையைக் காட்டினுல், வடவியட்னுமுக்கு அது ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்திருக்கிருர்.

**சீன எல்லைக்கருகே தாக்குதல்**

சீனுவுக்கு 80 மைல் தூரத்தில் வடவியட்னும்மீது அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டுகளைப் பொழிந்தன என்றும் சீனுவுக்கு மிக அருகே நடத்தப்பட்ட தாக்குதல் இது தான் என்றும் அறிவிக்கப்பட்டது. ரயில்பாதைகள், சாமான் ரயில் வண்டிகள் ஆகியன அப்போது தாக்கப்பட்டன.

அதேசமயம் பசிபிக் தீவிலிருந்து "பி 52" வெடிவிமானங்கள் வியட்காங் இலக்குகளைத் தாக்கின என்றும் இத்தகைய விமானங்கள் நேற்று 8-வது தடவையாக உபயோகிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது.

**யுதாண்ட்**

வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக பாதுகாப்பு சபையிலுள்ள 6 நிரந்தரமல்லாத நாடுகள் ஆராய்ந்து வருவதாகக் கூறப்பட்டது. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் ஹனேய்க்கும் சைகோனுக்கும் விஜயம் செய்வார் என்றும் மேலும் கூறப்பட்டது.

## "விடுதலைக்கு ஆபிரிக்கர் ஆயுதம் தாங்குவர்"

-ஓபடே

புதுடில்லி, ஆக 5

போர்த்துக்கீய காலனிகள், தென்ரொடீஷியா, தென்னுபிரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள மக்களின் மனே உறுதியை உகண்டா பிரதமர் திரு ஓபடே வலியுறுத்தினர். அவசியமானுல் ஆபிரிக்கர்கள் ஆயுதம் தாங்கிச் சண்டையிடுவார்கள் என அவர் கூறினர். கிழக்கு அல்லது மேற்கு நாடுகளுடன் இந்த விஷயத்தில் பேரம் பேச முடியாது என்றும் அவர் கூறினர்.

லண்டன், ஆக. 5

தென்ரொடீஷியாவில் ராணுவத்தை உபயோகிக்கும் நோக்கம் பிரிட்டனுக்குக் கிடையாது என பிரிட்டிஷ் மந்திரி திரு. ஹீலி கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ வைத்தவர்களை அணிவகுப்பில் அடையாளம் காட்டினர்

## இராணுவத் தாக்குதல் வழக்கில் நீதிபதி சாட்சியம்

சாவகச்சேரி, வியா,

இயக்கச்சி இராணுவத்தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பதில் நீதிபதி திரு எஸ். கே. சிரவிநாயகம் முன்னிலையில் நீதிபதி திரு பி. ஜே. பட்சில்வா சாட்சியமளித்தார். அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"கடந்த வருடம் ஜூலைமாதம் 7ம் திகதி இயக்கச்சி இராணுவ முகாமில் ஆள் அடையாள அணிவகுப்பு ஒன்று நடாத்தினேன். 6-ம் திகதி பலாலி பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ரொட்ரிக்கோ இந்த அணிவகுப்பு ஒன்று 7ம் திகதி நடைபெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று விண்ணப்பித்தார். அதைத் தொடர்ந்த இயக்கச்சி இராணுவ பொறுப்பதிகாரியிடம் அணிவகுப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டேன். அந்த அணிவகுப்பிற்கு மேஜர் அத்துக்கொறல்ல பொறுப்பாயிருந்தார். அவர் சொல்லியதன் பிரகாரம் 5-7-64ம் திகதி இயக்கச்சி இராணுவமுகாமில் இருந்த மொத்தம் 78 இராணுவத்தினர் அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்தனர். எட்டுப் பேரைத்தவிர மற்ற எல்லோரும் இராணுவ உடையில் இருந்தனர். மப்டியிலிருந்த இந்த எட்டுப் பேரும் உடை அணிந்த இராணுவத்தினர் 8 பேரும் கொண்டுவரப்பட்டு இவர்களுடன் அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார்கள். பின்னர் நான் கோர்ட் பியோன் சுப்பிரமணியத்தை சாட்சிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அனுப்பி வி. ராஜநாயகத்தை அழைத்து வருமாறு கூறினேன். அவரிடம் அங்கு நின்ற இராணுவத்தினருள் 5-7-64 அன்று மத்தியானம் 12 மணிபோல் குளிக்கும்போது அவரைப் பயமுறுத்தியவரை அடையாளம் காட்டுமாறு கேட்டேன். அவர் எஸ். ஏ. ஜ. நிரோசாவை அடையாளம் காட்டினார். பின் அந்தச் சாட்சியை வேறு இடத்திற்கு அனுப்பினேன். இராணுவ பொலிஸ் மாணிக்கராசா அவருக்குப் பொறுப்பாக இருந்தார். அடுத்து எனது உத்தரவின்படி சுப்பிரமணியம், சாட்சிகளிடம் சென்று மோசேஸ் ஜோன் பொன்சேகாவை அழைத்து வந்தார். அவர் தனது வீட்டிற்கு தீயிட்டவர்களை அடையாளம் காட்டுமாறு கூறினேன்.

### அடையாளம் காட்டினர்

அந்தச் சாட்சி அங்கு நின்ற இராணுவத்தினருள் டபிள்யு. என். கருணாரத்தினவைக் காட்டினர். அவர், ஓர் இராணுவ வீரருக்கு நெற்றியில் அடையாளம் இருந்ததாகவும், அவர்கள் தொப்பி போட்டிருந்தமையால் அந்த நபரை அடையாளம் காட்டமுடியாதிருப்பதாகவும் கூறினர். அதனால் அந்த இராணுவத்தினர் தங்கள் தொப்பியை அகற்றும்படி உத்தரவிட்டேன். அதன்பின் சாட்சி எச். ஐ. டக்ளஸை அடையாளம் காட்டினர். இவரையும் இராணுவப் பொலிஸிடம் பொறுப்பாய் அனுப்பிவிட்டு வணக்கத்துக்குரிய குருசாம்பதியை சுப்பிரமணியம் அழைத்துவந்தார். அவரிடம் காவல்நிலையத்துக்குச் சென்றவரைக் காட்டுமாறு கேட்டேன். டி. கே. சத்தியபாலாவைக் காட்டினர். அவர் பின்பு பொலிஸ்நிலையத்துக்கு முறையிடச் சென்றபோது சந்தித்த இராணுவ வீரர் என்று எச். குமாரசாமியை அடையாளம் காட்டினர். பின்னர் மரியாம்பிள்ளை பெனடிக்ற் அழைத்து வரப்பட்டார். 5-7-64ம் தேதி அவரது வீட்டுக்கு வந்து அவரைத் தாக்கியவர்களை அடையாளம் காட்டுமாறு கேட்டபோது ஜே. எம். பலகாயக்காவையும், எஸ். ஏ. சில்வாவையும், சி. எப். சிறீனையும் காட்டினர். அடையாள அணிவகுப்பின்போது சாட்சிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி. என். நவரத்தினம், திருவாளர்கள் இ. டானியல் சிவரூ, வி. செல்லத்தம்பி, என். நடராசா ஆகியோரின் உதவியுடன் பிரசன்னமாகியிருந்தார்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் குறுக்குவிசாரணையின்போது நீதிபதி அடையாள அணிவகுப்பின்போது பொன்சேகா என்ற சாட்சியினால் அடையாளம் காட்டப்பட்ட எச். ஐ. டக்ளஸ், மேஜர் அத்துக்கொறல்ல கூறிய இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த 78 பேர்களுள் ஒருவரல்ல என்று கூறினர்.

இவ்வழக்கில் இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் குமாரசாமி உட்பட 19 இராணுவத்தினர் மீது கடந்த 5-7-64ல் சட்டவிரோதமாகக் கூட்டம்கூடிக் குழப்பம் செய்ததாகவும், தாளையடி கிராமவாசிகள் சிலரை அடித்துக்காயமேற்படுத்தியதாகவும் சிலரின் வீடுகளுக்கும், உடைமைகளுக்கும் சேதமும், நஷ்டமும் உண்டாக்கியதாகவும், அத்திநாதரின் காருக்கு 2,000 ரூபா நஷ்டம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முடிக்குரிய தரப்பில் அட்டோர்ணி ஜெனரலுக்காக வழக்கறிஞர் திரு. ஒபயசேகராவும் எதிரிகள் சார்பில் திரு சி. பாலகிருஷ்ணனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு கே. வி. எஸ். சண்முகநாதனும் ஆஜராளுர்கள்.

## ஆஸ்பத்திரி ஊழியர் தாக்கப்பட்டார்

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் வேலைசெய்யும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கந்தையா என்பவர் ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருவர்களால் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கந்தையா பொலிசாருக்குப் புகார்செய்ததன்பேரில் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி [illegible] வெளியேற அஞ்சுகின்றனராம்.

## இந்துவாலிபர் சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி மணற்காடு இந்து வாலிபர் சங்க ஆண்டு விழா, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலைமண்டபத்தில் திரு க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. பிரம்மஸ்ரீ து. இரத்தினக் குருக்களின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமான இவ்விழாவில் சங்கடபோஷகர் புலவர் திரு ச. கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு க. தம்பிப்பிள்ளை, திருவாளர்கள் தா. சபாரத்தினம், சபா. நாகராஜன், வே. சுப்பிரமணியம், த. தியாகராஜா ஆகியோரும் பேசினர்.

"வழிகாட்டி", "பித்தன்யார்" என்ற நாடகங்களும் நடைபெற்றன. திரு வே. இரத்தினம் நன்றி கூறினர்.

## அயூப்கான் பாராட்டு

கராச்சி, ஆக. 5

பூட்டான் மன்னர் கொலை முயற்சியிலிருந்து தப்பியது குறித்து ஜனாதிபதி அயூப்கான் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார். சதிகாரர்களைப் பிடிக்க மேற்கு வங்கப் பொலிசார் எல்லையின் பல விடங்களில் கண்காணிப்பு நிலைகளை நிறுவியுள்ளனர்.

## புதுவகைத் திருட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டி, வல்வெட்டி ஆகிய பகுதிகளில் புதுவகைத் திருடர்கள் தொல்லையினால் இங்குள்ள மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளார்கள். வல்வெட்டியில் உள்ள ஒருவீட்டில் நடுச்சாமத்தில் திருடர் கோஷ்டியொன்று புதுவகையான முறையைக் கையாண்டு திருட்டு ஒன்றை நடத்தியதாகத் தெரியவருகிறது: அவ்வீட்டின் வாசலில் நின்றுகொண்டு அவர்களுக்குப் பழக்கமான ஒருவரைப்போல் குரல் கொடுத்து அவர்களை வெளியே வரச் செய்துவிட்டு, கோஷ்டியில் உள்ள ஒருசிலர் அவர்களுடன் கதை கொடுத்துக்கொண்டிருக்க, மற்றையசிலர் வீட்டுக்குள் வேறு பக்கத்தால் புகுந்து திருட்டை நடத்திவிட்டு ஓடிவிடுவதாகக் கூறப்படுகிறது.


இத்திருட்டுக் கோஷ்டி ஒரு நம்பர் மறைக்கப்பட்ட காரிலே சென்றதைத் தாம் கண்டதாக திருட்டு நடைபெற்ற வீட்டுக்காரர் ஒருவர் பொலிசாரிடம் புகார் செய்துள்ளனர்.

பாரிஸ், ஆக, 5

பிரெஞ்சுரிவிரா பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக 2 பேர் மாண்டனர்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Steve Reeves
in
SANDOKN THE GREAT
Techniscope -Technicolour)
FILM SHOT IN CEYLON

ஒரு பிரபலமான
டுப்பிளிகேட்டறின்
பிரபலமான மொடல்
சகாயமான விலைக்கு உண்டு
REX-ROTARY
M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினுல், ஒற்றைக் கணக்கை மாற்றி பைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றும் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேணடும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜஸ்லண்ட் கட்டிடம்,
கொழும்பு—3.

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் [illegible]

இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மொடேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்) | தீபொலி (நுவரேலியா) | கல்யாணி (காவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னூர்)



எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
மற்றும்பலர் நடிக்கும்
நீதிக்குப்பின் பாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## நீர்வேலி கிராம சபையின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னூற்காணப்படும் வேலை ஒப்பந்தமாக கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

நீர்வேலிக் கிராமசபைக் கந்தோரில் ரூபா 25/- கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்யப்பட வேண்டும். அப்பத்திரங்கள் 1965-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி திங்கட்கிழமை பன்னிரண்டுமணி வரைக்கும் மேற்படி கந்தோரில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கடதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டு, கூட்டின் இடது பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி "கிராமசபைத் தலைவர்" நீர்வேலி என விலாசமிட்டு 1965ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை 12 மணிக்கு முன், நீர்வேலிக் கிராமசபைக் கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் மேற்படிசபைத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் ஒப்பந்தம் எழுதிக்கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ சபைக்கு அதிகாரம் உண்டு.

கேள்வியின் விபரம்:— நீர்வேலி ஐயாவத்தை - இராசவீதி ஒழுங்கை வேலை.

க. குலசிங்கம்
நீர்வேலிக் கி. ச. தலைவர்

நீர்வேலி
2-7-65. 498

## விளையாட்டுப் போட்டி ஏற்படுத்தும் நன்மை

உடுப்பிட்டி, புதன்

"தேசிய அரசாங்கம் விளையாட்டுத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் ஒருவரையும் நியமித்திருக்கிறது. எனவே அரசாங்கம் ஊக்கமளிக்கும்போதே மாணவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். விளையாட்டுகளில் வெற்றி தோல்வி ஏற்படுவது சகஜம். பெரியவர்களானதும் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைச் சமாளித்துக் கொள்வதற்கு இத்தகைய போட்டிகளில் கலந்து அனுபவம் பெறவேண்டும். மாணவரிடையே மனத்துணிவையும் விடாமுயற்சியையும் விளையாட்டுப்போட்டி ஏற்படுத்துகிறது."

இவ்வாறு வடமராட்சிப் பகுதி காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற உடுப்பிட்டி வட்டார தமிழ்ப்பாட்சாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் கூறினர்.

வட்டார வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி பேசுகையில், வடமராட்சிப்பகுதி கல்வியில்மாத்திரமன்றிச் சகல துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. இதை நான் அனுபவ ரீதியாக அறிந்துள்ளேன் என்றார்.

மெய்வல்லுநர் போட்டிகளில் ஆண்களுக்குரிய வெற்றிக்கேடயத்தை இமையாணன் அரசினர் பாடசாலையும் (91 புள்ளிகள்) இரண்டாமிடத்தை கரவெட்டி யாக்கரு விநாயகர் பாடசாலையும் (79 புள்ளிகள்) பெற்றுக்கொண்டன.

பெண்களுக்குரிய கேடயத்தை யாக்கரு விநாயகர் வித்தியசாலை பெற்றுக்கொண்டது. இரண்டாமிடத்தை வதிரி ஞேமன் கதோலிக்க பாடசாலை பெற்றது. பரிசில்களை காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் வழங்கினர்.

கெருடாவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் திரு. செல்லத்துரை நன்றி கூறினர்.

## சென், யேம்ஸ் சனசமூக நிலையவிளையாட்டு போட்டி

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறை சென் யேம்ஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது டெல்பொலகோ இல்லம் 244 புள்ளிகளையும், விக்ரோரியா இல்லம் 207 புள்ளிகளையும் பெற்றன. டொன்பொஸ்கோ இல்லத்தைச் சேர்ந்த எம் இருதயதாசன், எஸ் இன்பம், எவ் எவ் அல்பேட், விக்ரோறியா இல்லத்தைச் சேர்ந்த எஸ் சந்தியாப்பிள்ளை சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு தீவுப்பகுதி எம்பியின் பாரியார் திருமதி பரமேஸ்வரி நவரத்தினம் பரிசுகளை வழங்கினர்.

நடைபெற்ற சில விளையாட்டுப்போட்டிகளின் முடிவு விபரம் வருமாறு:—

410 யார் ஓட்டம்: எஸ் சந்தியாப்பிள்ளை, எம் குசைப்பிள்ளை, எஸ் மரியவியானி.

குண்டு எறிதல்: எஸ் சந்தியாப்பிள்ளை, எவ் செபமாலைமுத்து, ஜே மரியநாயகம்

நீளப் பாய்தல்: எவ் அல்பேட், எவ் சேவியர், எவ் ஆசீர்வாதம்.

அஞ்சலோட்டம்: விக்ரோறியா இல்லம்.

800 யார் ஓட்டம்: எஸ் சந்தியாப்பிள்ளை, எம் குசைபாலன், எவ் இருதயதாசன்.

நீச்சல் போட்டி: ஏ அந்தோனிஐயா. வி சவிரிமுத்து, ஜே இருதயதாசன்.

பட்டுப்போட்டி: விக்ரோறியா இல்லம்.

சைக்கிள் ஓட்டம்: ஏ எவ் சேவியர், வி யோன்பீற்றர், எஸ் எமெலியானுஸ்.

### வேலைவாய்ப்பு

## காதிகள் பதவிக்கு

பம்பலப்பிட்டி, வியா

முஸ்லிம்விவாக, விவாகநீக்கச் சட்டத்தின் கீழான காதிகளின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு 35 வயதுக்குப் படாத இலங்கைப் பிரஜைகளாகவுள்ள முஸ்லிம்களிடமிருந்து நீதிபரிபாலன சேவைக்கமிஷன் விண்ணப்பங்கள் கோருகின்றது.

தெரியப்படுபவர்கள் குறிப்பிடப்படும் ஒரு பிரதேசத்துக்கெனவும், நியமனம் சம்பந்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஒரு காலத்துக்கெனவும் நியமிக்கப்படுவர். ஒரு காதி எப்பிரதேசத்துக்கென நியமிக்கப்படுகிறரோ, அவர் அப்பிரதேசத்திலுள்ளேயே சட்டமுறைப்படி வசிக்கவேண்டியவராவர்.

## பொதுநலக் கழகம் அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி, வியா

மீசாலைதெற்கு வாசிகளால் ஆரம்பிக்கப்பட்ட பொதுநலக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் சென்றவாரம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாசாலையில் சாவகச்சேரி நகரசபை அங்கத்தவர் திரு. வ. தர்மலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

கழக காரியதரிசி திரு. வி. என். சோமசுந்தரம் கழகத்தின் கொள்கைகளை விளக்கி பொருளாதார, சமய முன்னேற்றத்திற்கு இக்கழகம் அரசியல் சார்பின்றி அயராது உழைக்கும் என உறுதியளித்தார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர் கே. குலசேகரம். தலைவர் வ. தர்மலிங்கம் உபதலைவர் க. கார்த்திகேசு, காரியதரிசி வி. என் சோமசுந்தரம். உபகாரியதர்சி செ. கந்தசாமி. தனாதிகாரி ஏ. பரஞ்சோதி. நிர்வாகசபையினர் ஏழுபேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சுந்தரர் குருபூசை

வட்டுக்கோட்டை, வியா.

வட்டுக்கோட்டை அராலி மேற்கு திருவாசக மன்றத்தில் சுந்தரர்குருபூசை சிறப்பாக நடைபெற்றது. காலையில் விசேஷ பூசையும் அன்னதானமும் நடைபெற்றன.

மாலையில் திரு மு சதாசிவம் தலைமையில் சொற்பொழிகள், நடனம், இசைவிருந்து, சங்கீதகதாப்பிரசங்கம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### சங்கரத்தையில்

சங்கரத்தை மாதர் சங்கமும் இந்துவாலிபர் சங்கமும் கூட்டாகச் சேர்ந்து சுந்தரர் குருபூசையை விமரிசையாகச் சங்கத்தலைவர் க மகேஸ்வரன் தலைமையில் கொண்டாடின. மாதர்சங்கத்தைச் சேர்ந்த செல்வி ச கனகேஸ்வரியின் தயாரிப்பான ராதா கிருஷ்ண நடனம், ஔவையார் நாடகம் ஆகியவை இடம்பெற்றன. பண்டிதர் க இராசையா, செல்வன் சி துரைராசா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். சங்கப்போஷகர் திரு க வைரவநாதர் நன்றியுரை கூறினர். முடிவில் பிரசாதம் வழங்கப்பட்டது.

## இலங்கை அரசாங்க வெளிநாட்டுகொள்கை

### எகிப்திய பத்திரிகை கருத்து

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கையின் புதிய தேசிய அரசாங்கம் மண்டல சார்பற்ற கொள்கையை கடைப்பிடித்து வரும் என எகிப்தின் பிரபல சஞ்சிகையான 'கராப் ஒப்சேர்வர்' அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மண்டல சார்பற்ற கொள்கை புதிதல்ல என்றும் 1948 ம் வருடத்திலிருந்து 1956 ம் வருடம்வரை ஐக்கிய தேசியக் கட்சி பதவியிலிருந்தபோது மண்டல சார்பற்ற கொள்கையையே கடைப்பிடித்துவந்தது என்றும் மேற்படி சஞ்சிகை எடுத்துக் கூறியுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### வெள்ளி 6-8-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி 6-50 வைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல், 8-00 தேர்ந்த இசை 8-15 இ ளமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 உரைச்சித்திரம், 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 பியானோ, 10-15 தேர்ந்த இசை

## சமரசம்

ஊர்காவற்றுறை, புதன்

அண்மையில் 'சீல்' வைத்து பொலிசாரின் உதவியுடன் கனிகரிக்கப்பட்ட ஊர்காவற்றுறை சனசமூக நிலையத்தை பட்டினசபைத் தலைவர் திரு. வி. சிவசம்பு தற்போது அந்நிலயத்தை முன்போல் நிலைய நிர்வாகிகளிடத்தில் ஒப்படைத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தலையிட்டு இரு தரப்பினரிடையேயும் செய்துகொண்ட சமரசத்தின் பிரகாரமே இவ்விதம் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

நிலயத்தைத் திறமையாக நடாத்துவதற்கு நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர் என்னும் தெரிகிறது.

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் 17-ம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 125 1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரப் பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்னையானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I-ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV-ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. மாணிக்கவாசகர்.
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்)
யாழ்ப்பாணம்.

அட்டவணை

| பத்தி I கிராமச்சபையின் பெயர் | பத்தி II திகதி | பத்தி III நேரம் | பத்தி IV இடம் |
|---|---|---|---|
| மல்லாகம் | 16-8-65 | 10-00 | கிராமச்சபை அலுவலகம், மல்லாகம். |

# வரி விளம்பரம்

### கல்வி

ஜி. சி. இ. (சாதாரணம்) வகுப்புகளில் சில இடங்கள் காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 725

ஜி. சி. இ. உயர்தரம் கலை / விஞ்ஞானம் வகுப்புகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ். நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 781

ஜி. ஏ. கியூ. வகுப்புகள் தற்பொழுது நெல்லியடியிலும் நல்லூரிலும் நடாத்தப்படுகின்றது. சாவகச்சேரி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கெதியில் வகுப்புகள் நடத்த ஒழுங்கு செய்யப்படும். இதில் சேர விரும்புவோர்கள் தாமதமில்லாமல் தொடர்புகொள்ளவும். யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 732

இலண்டன் சேம்பர் ஒவ் கொமர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஒவ் புக்கீப்பர்ஸ், போஸ்மாஸ்டர்ஸ் அன் சிக்னலர்ஸ், குருவித்தியாலய பிரவேசம், அப்போதிக்கரி, ஸ்ரேசன்மாஸ்டர் பரீட்சைகளுக்குரிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 735

ஆங்கிலம் / தமிழ் கட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தக வகுப்புகள் தற்பொழுது நடைபெறுக் கொண்டிருக்கிறது. சில இடங்கள் உண்டு யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 736

சில நாட்களுக்குள் பி. ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதிக்காமல் பதிவு செய்துகொள்ளுங்கள், யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 737

### காணவில்லை

வவுனியா உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் பி. கனகநாயகத்தின் மணிபர்ஸ் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் தொலைந்துவிட்டது. பணத்துடன் ரயில் சீசன் டிக்கட்டும் சில முக்கியமான ரசீதுகளும் அதனுள் இருந்தன. கண்டெடுத்தோர் அதனை வவுனியா விவசாய அலுவலகத்துடனோ 'ஈழநாடு' காரியாலயத்திலேயோ ஒப்படைக்கலாம். அவர் தகுந்த சன்மானம் வழங்குவார். 744

### நெசவு

நெசவுத்தொழிலில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவோரும், "கைலசபிள்ளையார் நெசவு நிலயம்", 327, நாவலர் வீதி. (வைமன் வீதிச் சந்தி) யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பெண்கள் மட்டும் சேர்ந்துகொள்ளலாம். தகுந்த பாதுகாப்புடன் தங்குமிடவசதியுண்டு 734

### விற்பனைக்கு

C E 7000 நல்ல நிலையில் மேல்கம் பளைகொண்ட செவ்லெட் வான். பாவிக்கும் நிலையிலுள்ளது. தொடர்புகொள்க: சி. இராசநாயகம், 2, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். 740

### தேவை

புல்டோஸர்களும், விவசாய டிறக்ரர்களும், செலுத்தக்கூடிய சாரதிகளும், மெக்கானிக்குகளும் தேவை. புல்டோஸர் இயக்குனர்களும், மெக்கானிக்குகளும் ரூ. 500/-ம். டிறக்ரர் சாரதிகளும், மெக்கானிக்குகளும் ரூ. 350/-ம் பிணைப்பணமாகக் கட்டவேண்டும். சாரதிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும்: ஜவ்வர்ஜி பிறதர்ஸ், 150, சென். யோசப் வீதி, கொழும்பு—14. 738

## யாழ்ப்பாணத்தில் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாகத் திருட்டும் ஜேப்படியும் அதிகரித்துள்ளதாகவும் முக்கியமாக ஜேப்படித் திருட்டு புகையிரதங்களிலும், பஸ்களிலும் கூடியளவில் நடைபெறுவதாகவும் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் பஸ்நிலயத்திலும் கடந்த வாரம் பல ஜேப்படித் திருட்டுகள் நடைபெற்றுள்ளனதாகவும், திருட்டுப்போன பொருட்கள் திரும்பக் கிடைக்கவில்லையென்றும் அறியப்படுகிறது. இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர் ஒன்றில் கியூ வரிசையில் நின்ற ஒருவரும் தமது மணிபர்ஸை இழந்துவிட்டாரெனத் தெரிய வருகிறது.

## நம்பிக்கை மோசடி வழக்கு

சாவகச்சேரி, வியாழன்

கல்மடுவைச் சேர்ந்த அந்தோனியம்மா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த மரியாபி சௌக்கியம் என்பவருக்குச் சொந்தமான 2000 ரூபாவுக்கு நம்பிக்கை மோசம் புரிந்ததாகக் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி திரு பி. ரூபேர்ட் சில்வா எதிரியை 500ரூபாய் பிணையில்செல்ல அனுமதித்து வழக்கை இம்மாதம் 18-ந் திகதி ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆட்சேப மனு தள்ளுபடி

## செலவுத் தொகை வழங்க உத்தரவு

பம்பலப்பிட்டி, புதன்

ரத்கமத் தொகுதி தேர்தல் ஆட்சேப மனு இன்று செலவு தொகையுடன் ரத்துச் செய்யப்பட்டது.

ரத்கமத் தொகுதியிலிருந்து திரு. ரொான் எட்வின் திஸ்ஸ ரத்ந பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இம்மனுவை விசாரணை செய்வதற்கு போதுமான ஜாமீன் தொகை செலுத்தப்படவில்லையென எதிர் மனுதார் தரப்பில் எடுத்துக் காட்டப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட தேர்தல் வழக்கு நீதியரசர் திரு. எல். பி. டி. சில்வா மனுவைசெலவுதொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

# உலகின் பணக்கார நடிகர் வில்லியம் ஹோல்டன்

## நடிப்பிலிருந்து ஓய்வு பெறுவார்

லண்டன், ஆக. 4

உலகின் பெரிய பணக்கார நடிகர்களில் ஒருவரான வில்லியம் ஹோல்டன் நடிப்புத்தொழிலிருந்து ஓய்வு பெறுகிறார் அவருக்குள்ள பரந்த வர்த்தக நலன்களினால் ஹோல்டனின் செல்வம் மேலும் பெருகும்.

சுமார் 50 படங்களுக்கு மேல் நடித்துள்ள வில்லியம் ஹோல்டனுக்கு 47 வயது. தற்பொழுதுள்ள பொறுப்புக்களை முடித்த பிறகு இனிமேல் படங்களில் நடிப்பதில்லை என அவர் அறிவித்தார்.

"நான் நடிப்புக்கு என்னை ஒருபோதும் அர்ப்பணித்ததில்லை. ஏதோ நடித்துக்கொண்டிருந்தேன். படஉலகின் வெறித்தனமான போக்கு அனைத்தையும் நான் வெறுக்கிறேன்" என்றார் அவர்.

மொத்தமாக ஒரு தொகையைப் பேசிக்கொள்ளாமல் ஆதாயத்தில் ஒருவிகித சாரத்தைக் கேட்டு அவர்படங்களில் நடித்ததால் ஏராளமாகப் பணம் சேர்த்துவிட்டார்.

"பிரிட்ஜ்ஒன்திரிவர் குவாய்" என்ற படத்தில் மட்டும் அவருக்கு ரூபா 1 கோடியே 83 லட்சம் கிடைத்தது, அதிலிருந்து அவருக்கு இன்னும் பணம்வந்துகொண்டிருக்கிறது.

அவருக்குகாங்காங்கில் வர்த்தகஒலிபரப்புச்செய்யும் வானொலிநிலையமும், ஜப்பானில் மின்னணுவியல் தொழிலும் உள்ளன நிலத்திலும் ஏராளமாகப்பணம் போட்டிருக்கிறார்.

---

வாஷிங்டன் ஆக. 4

"மெரினர் 4" என்ற செவ்வாய்க்கிரகம் தனது அலுவல்களைப் பூர்த்திசெய்திருக்கிறது. இரண்டாவது தடவையாக அது முன்பு அனுப்பிய புகைப்படங்களை மீண்டும் அனுப்பிமுடித்துவிட்டது.

## குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க மந்திரி உறுதி

ஊர்காவற்றுறை, புதன்

"புங்குடுதீவைச்சேர்ந்த ஊரதீவு மக்கள் நல்ல குடிதண்ணீர் இல்லாமையால் அசுத்தநீரைப் பருகி நோயாளிகளாகிவிடுகிறார்கள். அவர்களின் வைத்திய வசதியைக் கவனிக்க நல்ல வைத்தியசாலை இல்லை. இப்பகுதியில் இருக்கும் நடமாடும் டிஸ்பென்சரியில் கிழமையில் இரண்டு நாட்களில் ஒரு மணித்தியாலம் அல்லது அரை மணித்தியாலமே ஒரு அப்போதிக்கரி வந்து போகின்றார் நல்ல மருந்துகளும்கிடையாது. இந்த டிஸ்பென்சரிக்குத் தனியாக ஒரு அப்போதிக்கரியை நியமிக்கச் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்புகொள்ளவேண்டுகிறோம்." இவ்வாறு ஊரதீவு சனசமூக நிலையத்தினர் அமைச்சர் திரு. திருச்செல்வம் ஊரதீவுக்கு விஜயம் செய்தபோது மகஜர் மூலம் கேட்டுக்கொண்டனர். கிராம முன்னேற்றச் சங்கத்தினால் எட்டு வருடங்களுக்குமுன் கட்டிடம் கட்டப்பட்டிருந்தும், இன்னும் ஒரு நெசவுசாலையோ அல்லது குடிசைக் கைத்தொழில் நிலையமோ அமைப்பதற்கு உபகரணங்கள் கிடைக்கவில்லை எனவும் ஒருவருக்கு அரைக்கலன் வீதம் கொடுக்கப்படும் குடிநீரை ஒரு கலன் வீதம் கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட பகுதியை பணிக்கும்படியும் மந்திரியைக் கேட்டுக்கொண்டனர்.

வித்துவான் சி. ஆறுமுகம், திரு. கு. வி. செல்வத்துரை ஆகியோர் குடிநீர் கஷ்டம்பற்றி மந்திரிக்கு எடுத்துரைத்தனர்.

இரண்டு வருடத்திற்குள் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதாக மந்திரி உறுதி கூறினர்.

புங்குடுதீவுகிராமசபைத்தலைவர் திரு கே வி தம்பித்துரை சமர்ப்பித்த குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமான மகஜரையும் கவனிப்பதாக மந்திரி வாக்களித்தார்.

---

# கள்ளுக் கடையில் கத்திக் குத்து

சாவகச்சேரி, புதன்

கள்ளுக்கடையொன்றில் ஏற்பட்ட வாய்ச்சண்டை, சிலநிமிட நேரத்தில் கத்திச் சண்டையாக மாறியதன் விளைவாக ஒருவர் பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளான சம்பவம் கொடிகாமத்தில் நடைபெற்றுள்ளது.

கள்ளுக்கடையில் மது அருந்தச்சென்றவர்களில் சிலர் மது போதையில், பொழுதுபோக்குக்காக வாய்ச்சண்டையை ஆரம்பித்து, இருகோஷ்டிகள் ஏற்பட்டு கத்திச்சண்டையாக உருவெடுத்தது. சாண்டான் போக்கட்டி என்னுமிடத்தைச் சேர்ந்த நாகன் சின்னையா என்பவர் பலத்த காயங்களுக்குள்ளானர். சந்தேக நபர்களான அதே இடத்தைச் சேர்ந்த கே. சுப்பையா, கே செல்லையா ஆகியோர் தப்பிஓடி தலைமறைவாக இருப்பதாக கூறப்படுகிறது.

சாவகச்சேரி பொலிஸார், தீவிர புலன்விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

## அறிவித்தல்

### அருணோதயக் கல்லூரி

பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 7-8-65 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் சமூகமளிக்கவும்.

சு. சிவசுப்பிரமணியம்,
அளவெட்டி, [illegible]
3-8-65 494

---

## விற்பனைக்கு

சாவகச்சேரியிலுள்ள 'இலங்காபிமானி' அச்சகம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: எஸ். கதிர்காமர், C/o எஸ். வி. அரியராஜா, லை. எம். சி. ஏ. சண்டிக்குளி, யாழ்ப்பாணம். 789

---

## அறிவித்தல்

நெசவுத்தொழில்அனுபவம் உள்ளவர்களும், கற்க விரும்புவோரும், "கைலாசபிள்ளையார்நெசவுநிலையம்" 827, காவலர்வீதி (வைமன்வீதிச் சந்தி) யாழ்ப்பாணம் விலாசத்தில் பெண்கள்மட்டும் சேர்ந்து கொள்ளலாம். தகுந்த பாதுகாப்புடன் தங்குமிட வசதியுண்டு.

பஸ் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு 'வாமதேவால்', 50, பிரதான வீதி யாழ்ப்பாணம் விலாச எமது கிளை ஸ்தாபனத்தில் "கைத்தறி நெசவு" வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதைத் தெரியப்படுத்துகின்றேம். முன்னேற்றமான இடம் நேரில் விண்ணப்பிக்கவும்.

எமது ஸ்தாபனங்களில் கைத்தறித் துணிகள் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம். 495

---

## பிரிவுபசாரம்

திருக்கேதீஸ்வரம், புதன்

திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு இ சின்னத்தம்பியும், ஆசிரியைசெல்வி இ இந்திராணியும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் ஆகிச் செல்வதையிட்டு அவர்களிருவருக்கும் வித்தியாலயத்தில் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. இவர்களின் சேவையைத் தலைமையாசிரியர் உட்படப் பலர் பாராட்டிப் பேசினர்.

---

யாழ்ப்பாணம், வியா

கொக்குவில் கிழக்கு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் கூட்டமொன்று சனிக்கிழமை [illegible] பிட்டி எம். பி திரு மு சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்

## கருத்தரங்குகள் தரும் பயன்

உடுப்பிட்டி, புதன்

சமீபத்தில் நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற புவியியற் கருத்தரங்கினால் மாணவர்கள் மிகவும் பயனடைந்துள்ளாரென்றும் இத்தகைய கருத்தரங்குகள் மாணவர் மத்தியில் நடாத்தப்படவேண்டியது அவசியமென்றும் வடமராட்சிப்பகுதியிலுள்ள பல கல்லூரிகளும், யாழ்ப்பாணக் கல்லூரிகளும் நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய புவியியல் மன்றத் தலைவர் திரு டபிள்யு ஆர் அருணையாவைப் பாராட்டியுள்ளன.

பல்கலைக்கழகப்புகுமுகமாணவர்களுக்கென நடாத்திய கருத்தரங்கு போன்றே கனிஷ்ட பொதுத் தராதரப்பத்திர வகுப்பு மாணவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய விரிவான புவியியல் கருத்தரங்கு ஒன்றை வெகு விரைவில் நடாத்துவதற்குத் தாம்உத்தேசித்திருப்பதாகவும் திரு அருணையா தெரிவித்தார். இம்முயற்சியில் புவியியல் விரிவுரையாளர் திரு ஆ தாமோதரம்பிள்ளையும் கலந்துகொண்டார்.

---

## தடுப்பு நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பு மாவட்டப் பகுதியில் இளம்பிள்ளை வாதநோய் திடீரெனப் பரவக்கூடுமென சுகாதார அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளார்கள். நோய் பரவாமல் தடுப்பதற்காக கொழும்பு மாநகரசபை சுகாதாரப் [illegible] வுடன் சேர்ந்து கூட்டுநடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

---

# அமெரிக்க வாலிபர்கள் தமிழில் பாடினர்

யாழ்ப்பாணம், வியாழன்

அமெரிக்கா, ஜப்பான் இந்நாடுகளிலிருந்து 4 வாலிபர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து, சாவகச்சேரி டிரிபேக்ஸ் கல்லூரி, வேம்படி கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சென்ட் ஜோன்ஸ் கல்லூரி, இவற்றில் தார்மீக புனருத்தாரண சம்பந்தமான பாடல்களைப் பாடி, பலரது பாராட்டுகளையும் பெற்றனர்; இலங்கை, யாழ்ப்பாணம் இவற்றைப் பற்றியும் இரு பாடல்கள் தமிழில் பாடியது பலத்த கரகோஷம் பெற்றன. நகைச்சுவையுடன் அவர்கள் இடையிடையே பேசி, பரிபூரண வாய்மை, தூய்மை, சுயநலமின்மை, அன்பு இந்த நான்கு அடிப்படைக் கொள்கைகளையும் வற்புறுத்தினர். இன்று காலை இவர்கள் கொழும்புக்குத் திரும்பினர்.

இந்தியாவிலே மகாத்மா காந்தி அடிகளின் பேரரான ராஜ்மோகன்காந்தியின் அழைப்பின்மீது இவர்கள் இந்தியா வந்து, இன்னிசை மூலம் பிரசாரம் செய்ததுடன், இலங்கையிலும் சில வாரங்களாக இத்தொண்டு செய்து வருகின்றனர். அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறும் ஒரு மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இவர்கள் இந்தியா திரும்புகிறார்கள்.

# யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு பஸ் சேவை

## 7-ம் திகதி காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா

கதிர்காமம் போய்வரும் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு இ போ ச சபையினர் விசேஷ பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் செல்வதற்கு பஸ் கட்டணம் 12 ரூபாய் 50 சதம், பருத்தித்துறையிலிருந்து கதிர்காமம் செல்வதற்கு கட்டணம் 12 ரூபாய் 65 சதம்.

7-ம் திகதி காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ் 8-ந் திகதி அதிகாலை 3-30க்குகதிர்காமத்தைப்போய் அடையும், 7-ம் திகதி பருத்தித்துறையிலிருந்து காலை 6 மணிக்குக் கதிர்காமம் புறப்படும் பஸ் கதிர்காமத்தை அடுத்தநாள் அதிகாலை 1-30க்கு சென்றடையும், 10-ம் திகதி காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ் கதிர்காமத்தை அடுத்த நாள் அதிகாலை 3 மணிக்கு சென்றடையும், 10-ம் திகதி காலை பருத்தித்துறையிலிருந்து 6 மணிக்கு பஸ் புறப்பட்டு அடுத்தநாள் அதிகாலை 3-30க்கு கதிர்காமத்தைப்போய்ச்சேரும் 9-ம் திகதி கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், பருத்தித்துறைக்கும் பஸ் காலை 6 மணிக்கு புறப்படஇருக்கிறது. 12-ம் திகதி காலை 10 மணிக்கு கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் 12-ம் திகதி காலை 8 மணிக்கு கதிர்காமத்திலிருந்து பருத்தித்துறைக்கும் விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ராஜினுமா செய்யக்கூடும்

பம்பலப்பிட்டி, புதன்

கவர்னர்ஜெனரல் பதவியிலிருந்து திரு. வில்லியம் கோபல்லவா விரைவில் ராஜினுமா செய்யக்கூடும் என அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. வரவு - செலவுத் திட்டப் பிரசங்கத்தை நிதி அமைச்சர் நிகழ்த்திய இரண்டொரு தினங்களின் பின் திரு. கோபல்லவா தமது பதவியிலிருந்து விலகுவார் என்று கூறப்படுகிறது.

## சேரிடம் சேர்ந்தது!

யாழ்ப்பாணம், வியா.

சென்ற மாதம் 31-ந் திகதி கீழே கிடந்த ஒரு கொட்டைப் பெட்டியை மாவிட்டபுரம் கீழவீதி ஸ்ரீசுப்பிரமணியர் மடத்தைச் சேர்ந்த திரு எஸ். பொன்னம்பலம் என்பவர் எடுத்தார், அந்தக் கொட்டைப் பெட்டிக்குள் 88 ரூபாய் 81 சதமும் ரயில் சீசன் டிக்கட்டும் இருந்தது. அதற்குரியவரை அவர் தேடித்திருந்தார். கண்டு கொள்ளமுடியவில்லை. கடைசியில் 'ஈழநாடு' பத்திரிகையின் உதவியைநாடி வந்தார். இதே சமயம் அதைத்தவறவிட்டவரும் தகவல் அறிந்து 'ஈழநாடு' காரியாலயத்துக்குவந்து சேர்ந்தார். தகுந்த அத்தாட்சி காட்டியதன்பின் தையிட்டியைச் சேர்ந்த இ. தம்பன் தமது கொட்டைப்பெட்டியைப் பெற்றுச் சென்றார்.

## கிராமசபை உபதலைவர்

சாவகச்சேரி, வியாழன்

சமீபத்தில் நடைபெற்ற சாவகச்சேரிச் கிராமசபைக் கூட்டத்தில், புதிய உபதலைவராக 5 ம் வட்டார உறுப்பினர் திரு. ஆ. மகேச்வரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## கிளைகள் அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை.வியா

இலங்கைத் தமிழரசுக்கட்சி பருத்தித்துறை நகரசபை வட்டாரங்கள் தோறும் கட்சிக்கிளைகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதில் சுறுசுறுப்பாகக் கடமையாற்றி வருகிறது.

கடந்தவாரம் நெல்லண்டை வட்டாரத்தில் கிளையொன்றை நிறுவியது.

கோயில் வட்டாரத்தில் திரு த இராமநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிளையொன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. கிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ வீரசிங்கம், உபதலைவர்- திரு க சதாசிவம், காரியதரிசி- திரு க அருளானந்தம், உபகாரியதரிசி திரு ஐ வேலும்மயிலும் மேலும் ஐவர்கொண்ட நிர்வாகசபையொன்று தெரிவுசெய்யப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org